இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை இயக்குநர் அவர்களின்

செயல்முறை ஆணை, சென்னை 600 106

முன்னிலை திரு. க. கணேஷ், இ.ஆ.ப

ந.க. எண். 7223 / புவி / 2021 நாள். 21.09.2021.

பொருள்: இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்குநரகம் – பதிவேடுகள் பராமரிப்பது குறித்து உயர்மட்டக் குழு அறிக்கை இந்திய மருத்துவ துறை மருத்துவமனைகள் செம்மையாக செயல்பட வழிகாட்டு நெறிமுறைகள்.

- - - - - - -

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறையின் கட்டுப்பாட்டில் செயல்படும் சித்தா, ஆயுர்வேதா, யுனானி, ஓமியோபதி மற்றும் யோகா மற்றும் இயற்கை மருத்துவப் பிரிவுகளில் இனி வரும் காலங்களில் பதிவேடுகள் பராமரிப்பது குறித்து ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டது அக்குழுவினர் பல்வேறு நடைமுறையில் உள்ள அரசாணைகள், விதிமுறைகள் மற்றும் பொதுமக்களுக்கு உயர்தர சேவை வழங்க வேண்டி எடுக்கப்பட வேண்டிய நடைமுறைகளை ஆராய்ந்து கீழ்கண்ட பரிந்துரைகள் வழங்கப்படுகிறது.

1. (அ) மாவட்ட தலைமை மருத்துவ மனைகளில் மாவட்ட சித்த மருத்துவ அலுவலர் முன்னிலையில் வருகைப் பதிவேடு பராமரிக்க வேண்டும். மாவட்ட சித்த மருத்துவர் இல்லாத பட்சத்தில் பணியில் மூத்த ஆயுஷ் மருத்துவர் மூலம் காலை 8.00 மணியளவில் வருகைப் பதிவேட்டை முடிக்க வேண்டும்.

   (ஆ) வருகைப் பதிவேடு நிலையத்திற்கு ஒன்று தான் பராமரிக்கப்பட வேண்டும். தாலுக்கா மற்றும் தாலுக்கா அல்லாத மருத்துவமனைகளில் ஆயுஷ் மருத்துவர்களில் பணிமூப்பு பெற்று உள்ளவர் மற்ற ஆயுஷ் மருத்துவர்களின் வருகையை பராமரிப்பு செய்து தினசரி காலை 8.00 அளவில் வருகைப் பதிவேட்டை முடித்து பொதுப் பிரிவு மருத்துவ அலுவலரிடம் மேலொப்பம் பெற்று இருக்க வேண்டும்.

   (இ) வருகைப் பதிவேடு நிலையத்திற்கு ஒன்று தான் பராமரிக்க வேண்டும். அரசு ஆரம்ப சுகாதார நிலையம் / மருந்தகங்களில் ஆயுஷ் மருத்துவர்களில் பணிமூப்பு பெற்று உள்ளவர் மற்ற ஆயுஷ் மருத்துவர்களின் வருகையை பராமரிப்பு செய்து தினசரி காலை 9.30 அளவில் வருகைப் பதிவேட்டை முடித்து பொதுப் பிரிவு மருத்துவ அலுவலரிடம் மேலொப்பம் பெற்று இருக்க வேண்டும்.

2. நோயாளர் பார்க்கும் பதிவேட்டை தனியாக மருத்துவர் பராமரிக்க வேண்டும் (OP Nominal Register). வெளி நோயாளர் சீட்டு வழங்கும் பதிவேட்டை (OP Ticket) மருத்துவமனைப் பணியாளர் / பல்நோக்கு பணியாளர் பராமரிக்க வேண்டும்.

3. மருத்துவர், வெளி நோயாளர் பதிவேட்டில் வேலை நேரம் முடிந்தவுடன் அன்றைய கணக்கெடுப்பு சுருக்கம் (Census Abstract) / நோய் வகைப்பாடு (Disease wise Classification) அன்றைய தினத்திலேயே முடிக்கப்பட வேண்டும்.

4. நிலையத்தில் வெளி நோயாளிகள்வருகை விளக்கப்படம் (OP Census Chart) / மாதாந்திர நோயாளிகள் வருகை விளக்கப்படம் (Monthly Census Chart) / வருடாந்திர நோயாளிகள் வருகை விளக்கப்படம் (Yearly Census Chart) / முக்கிய இருப்பு மருந்து பட்டியல் (Main Stock Medicine List) / துணை இருப்பு மருந்து பட்டியல் (Sub Stock Medicine List) பார்வையிடுவதற்கு கண்டிப்பாக இருத்தல் வேண்டும். அவற்றில் மருத்துவர் / மருந்தாளுநர் சுருக்கொப்பமிட்டு இருத்தல் வேண்டும்.

5. நிலையத்தில் உள்ள அனைத்து சிகிச்சை கருவிகள் குறித்த விவரங்கள் அடங்கிய விளம்பர பலகை (Notice Board)-ல் பொதுமக்கள் பார்வையிடும்படி வைத்திருக்க வேண்டும்.

6. மருத்துவர், சிகிச்சை வழங்கியது பற்றிய சுருக்கம் (Abstract) பதிவேட்டில் தினசரி எழுதி முடித்து இருத்தல் வேண்டும்.

7. வெளி நோயாளர் பெயரளவு பதிவேட்டில் (OP Nominal Register), பெயர், பாலினம், வயது, கைபேசி எண், ஆதார் எண், குடும்ப அட்டை எண், பான்கார்டு எண், நோய் கணிப்பு விவரங்களில் இவற்றில் ஏதேனும் ஒன்று புதிய மற்றும் பழைய நோயாளிகளுக்கும் கண்டிப்பாக குறிப்பிட வேண்டும்.

8. இயற்கை மற்றும் யோகா மருத்துவத்தில் OP-க்கு வரும் நோயாளிகளுக்கு சிகிச்சை குறித்து எழுதும் டோக்கனில் என்ன சிகிச்சை வழங்கப்பட்டது / என்ன நோய்க்கு வழங்கப்பட்டது / எத்தனையாவது நாள் வழங்கப்படுகிறது என்ற குறிப்புகள் இருத்தல் வேண்டும்.

9. தனி மூலிகைப் பொடி / தேன் / நல்லெண்ணெய் / அரோமா ஆயில் / அகச்சிவப்பு வலி நிவாரண விளக்கு (Infrared Pain Relief Lamp) / கைத்தறி துணி (Linen Cloth) / சேறு (Mud) இவைகளைசிகிச்சைக்காக வழங்கினால் அதன் அளவுகள் கண்டிப்பாக குறிப்பிடப்பட வேண்டும்.

10. யோகா மற்றும் இயற்கை மருத்துவ பிரிவிற்கு வழங்கப்படும் இயற்கை நலப் பெட்டகம் சார்ந்த பதிவேடுகள் தனியாக பராமரிக்க வேண்டும். தினசரி மருத்துவர் பெயரளவு பதிவேட்டில் (Doctor Nominal Register) நோயாளியை பார்த்ததற்கான பதிவு (OP Number, Name, Age), நோய் கணிப்பு HB அளவு குறிப்பிட்டிருக்க வேண்டும். தனிப் பதிவேட்டில் பயனாளர் கையொப்பம் அல்லது கைரேகை, அலைபேசி எண் இருத்தல் வேண்டும்.

11. மதுமேகம், இரத்த அழுத்தம், குழந்தையின்மை, தைராய்டு, உடல் பருமன், புற்று நோய், மூட்டு வலிகள், ஆஸ்துமா, குழந்தை நோய்கள், பொது சிகிச்சை உள்ளிட்ட நோய்களுக்கு வாரத்தில் ஒரு நாள் சிறப்பு சிகிச்சை அளிக்க வேண்டும். இதற்கென தனித் தனியாக பதிவேடுகள் பராமரிக்க வேண்டும். மேற்கண்ட சிகிச்சைகள் இந் நிலையத்தில் வழங்கப்படுகிறது என்று பொதுமக்கள் பார்வையிடும்படி விளம்பரப்படுத்த வேண்டும்.

12. வாரத்தில் ஒரு நாள் காலை வேலைப் பணி முடிந்தவுடன் **“மக்களைத் தேடி மருத்துவம்”** நிகழ்ச்சியை பள்ளி, கல்லூரி, அரசு அலுவலகங்கள், பொது நிறுவனங்கள், கிராமங்கள் மற்றும் நகரங்களில் தொடர்ந்து நடத்திட வேண்டும்.

13. நிலையத்திலுள்ள எந்த ஒரு பொருளையோ மருந்தையோ மாவட்ட சித்த மருத்துவர் அனுமதி இல்லாமல் வேறு நிலையங்களுக்கு மாற்றம் செய்யக்கூடாது.

14. மாவட்ட சித்த மருத்துவ அலுவலரின் மேலொப்பம் இல்லாமல் எந்த கடிதமும் நேரிடையாக இயக்குநர் அவர்களுக்கோ, பிறருக்கோ அனுப்பக்கூடாது. மாவட்ட சித்த மருத்துவ அலுவலரின் உரிய வழிமுறையாக அனைத்து கடித போக்குவரத்துகளும் நடைபெற வேண்டும்.

15. மாவட்ட சித்த மருத்துவ அலுவலரின் முன் அனுமதியோடு தான் எந்த விடுப்பும் துய்க்க வேண்டும். மருத்துவ விடுப்பு எடுக்க நேரிட்டால், தகவல் உடன் மாவட்ட சித்த மருத்துவ அலுவலருக்கு தெரிவிப்பதுடன், விடுப்பு விண்ணப்பம் மருத்துவ சான்றிதழுடன் ஏழு நாட்களுக்குள் அலுவலகத்தில் அளிக்கப்பட வேண்டும்.

16. நிலையத்தில் பராமரிக்கப்படும் அனைத்து பதிவேடுகள், தளவாட சாமான்கள் குறிப்புகள் அடங்கிய பதிவேடு அட்டவணை ஒவ்வொரு நிலையத்திலும் கண்டிப்பாக வைத்திருக்க வேண்டும்.

எனவே, மாவட்ட சித்த மருத்துவ அலுவலர்கள், மாதந்தோறும் நடைபெறும் உதவி மருத்துவ அலுவலர்கள் ஆய்வுக் கூட்டத்தில் செயல் முறை ஆணையில் கூறப்பட்ட பரிந்துரைகளை எடுத்துக் கூறி பின்பற்றுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அத்துடன், மாவட்ட சித்த மருத்துவ அலுவலர்கள் திடீர் ஆய்வு மேற்கொள்ளும் பொழுது மேற்கண்ட பரிந்துரைகளை பின்பற்றுகிறார்களா? என்று ஆய்வு செய்து அவற்றில் குறைகள் கண்டறியப்பட்டால் அதன் அறிக்கையை இயக்குநர் அவர்களுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், மாவட்ட சித்த மருத்துவ அலுவலர்கள் பிரதி மாதந்தோறும் தாங்கள் மேற்கொண்ட ஆய்வு அறிக்கையை தவறாமல் இவ்வியக்குநரக தணிக்கை பிரிவிற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். **செயல் முறை ஆணையில் கூறப்பட்ட பரிந்துரைகள் உடனடியாக அமலுக்கு வருகிறது என தெரிவிக்கப்படுகிறது.**

இது தொடர்பாக, சார்நிலை அலுவலர்கள் இதற்கான ஒப்புதல் கடிதம் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். ஒப்புதல் கடிதம் அனுப்பாதவர்கள் இயக்குநர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

ஒப்பம் /– சு. கணேஷ்,
இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி
இயக்குநர்.

பெறுநர்
இயக்குநர் (பொ), ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு பிரிவு (இம), சென்னை – 600 106
இயக்குநர் (பொ), சர்வதேச யோகா (ம) இயற்கை மருத்துவ அறிவியல் நிறுவனம், செங்கல்பட்டு
அனைத்து இந்திய முறை கல்லூரி முதல்வர்கள்
கண்காணிப்பாளர், அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை, சென்னை – 600 106
இயக்குநர் (பொ), வர்மா துறை, அறிஞர் அண்ணா அரசு இந்திய மருத்துவமனை, சென்னை
அனைத்து மாவட்ட சித்த மருத்துவ அலுவலர்கள்
இவ்வியக்குநரக தணிக்கைப் பிரிவு

நகல் : இயக்குநர் அவர்களின் நேர்முக உதவியாளர், தகவலுக்காக அனுப்பப்படுகிறது

உண்மை நகல் / அனுப்பப்படுகிறது

உதவி இயக்குநர் (பொ).

திசே
21/09/21